# தமிழ்நாட்டில் முழு மது விலக்கு முடியுமா?

# முடியும்! நிச்சயமாக முடியும்!

**ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் கோடி கூடுதல் வருவாய் தரும்**

## தமிழக அரசினர்க்கு உருப்படியான கருத்துரைகள்


























வெளியீடு :
தமிழ்நாடு பொதுப்பணித்துறை
**மூத்த பொறியாளர் சங்கம்** (பதிவு எண்: 178/2001)
1c/36, வள்ளுவர் சாலை, ட்டி.எஸ்.டி நகர், அரும்பாக்கம், சென்னை - 600 106.
(044- 6566 8377 / 65 879 289) மின்னஞ்சல் : tanseapwd@gmail.com

## மதுவிற்கு எதிரான பரப்புரை - ஆகஸ்டு 2015

**தொகுப்பும் பதிப்பும்**

- பொறிஞர்.அ.வீரப்பன், ME(Struct), FIE,MICI, Dip. LL & AL
- பொறிஞர்.ந. கைலாசபதி , BE, PG.Dip in RS

**துணை:**

- பொறிஞர்.பா. அருண்குமார், BE
- திருமதி. வீர. மலர்விழி, BSc
- திருமதி. வெ. ஜெயந்தி, DCE

**ஒளியச்சு:**

எம்.எஸ். கிராபிக் & பிரிண்ட்ஸ், சென்னை - 600 014 (M) 97100 37123

**அச்சகம்:**

வி.பி.எஸ். அச்சகம், சென்னை - 600 005 (M) 98411 64181

**வெளியீடு:**

தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்த பொறியாளர் சங்கம் ☎: 044 - 65 879 289

## மதுவிற்கு எதிரான பரப்புரை




### 1. யாருக்கும் வெட்கம் இல்லை/ குற்ற உணர்வும் இல்லை

(அரசியல் வாதிகட்கும் அமைச்சர்களுக்கும்)




**மது என்பது இங்கே அரசியல்.** அதன் வேர் அழமானது. அது சாதாரண அரசியல் அல்ல. பெரும் கூட்டத்தின் மூளையை மழுங்கச் செய்யும் அரசியல். கேள்விகளை மவுனிக்கச் செய்யும் அல்லது கேள்விகளை உற்பத்தி செய்ய விடாத அரசியல். மக்களின் உரிமைக்கான எல்லா விதமான போராட்டங்களையும் எழுச்சி பெறவிடாத அரசியல். தண்ணீரப் பிரச்சினை தொடங்கி ஊழல் பிரச்சினை வரைக்கும் மக்கள் சக்தியை ஒருங்கிணைக்க விடாத அரசியல். எட்டும் தூரத்தில் கொத்துக்கொத்தாக உயிர்கள் கொல்லப்பட்டலும் வேடிக்கை பார்க்கச் செய்யும் அரசியல்.

மணல் கொள்ளை, கனிமக் கொள்ளையைவிட ஆபத்து நிறைந்தது மது அரசியல். அதிலெல்லாம் இயற்கை வளத்தைச் சுரண்டுகிறார்கள். இதில் மனிதனின் பொருளாதாரத்தைச் சுரண்டுகிறார்கள். அதற்கும் மேலாக, மனிதனின் உயிரையே சுரண்டுகிறார்கள்.

மதுவிற்கு எதிரான பரப்புரை இன்றைய நாளில் காலத்தின் கட்டாயமாக உருவெடுத்துள்ளது. அதுவும் குறிப்பாக அமைச்சர்கள், மேல்நிலை/தலைமைச்செயலக ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அனைவருக்குமே மதுமற்றும் மணல் விற்பனையால் கிடைக்கும் கறைபட்ட நிதித்தொகை ரூ 26,000+ ரூ 10,000 கோடி/ ஆண்டொன்றுக்கு. தவிர்க்க முடியாத அரசு வருவாயாகப் பார்க்கப்படுகிறது என்பது மட்டுமன்று; இதை விட்டால் **வேறுவழியில்லை என்ற மாயையும் உருவாக்கப் பட்டுள்ளதை**ப் பார்க்கிறோம். மதுவிற்றல் மற்றும் மணல் அள்ளல் எனும் சமுதாயக் கேடுகள் குற்றமாகக் கருதியாரும் வேதனைப் படுவதாகவும், -ஏன் வெட்கப்படுவதாகவும் தெரியவில்லை. இச்சூழ்நிலையில் **தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்தபொறியாளர் சங்கம்** இதில் சமுதாய அக்கறையுடனும் தமிழ்நாட்டுப் பற்றுடனும் தமிழக அரசின் வருவாயை கூடுதலாக்க **(ரூ 5.00 லட்சம் கோடி அளவுக்கு) நிர்வாக - சீரமைப்பு வழிகளைத் தெரிவிக்கிறது.** தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் கனிவுடன் கவனித்து உறுதியாக ஏற்ற நடவடிக்கைகளை உடன் எடுப்பார்கள் என்ற நன்னம்பிக்கையோடு.

இந்தப் பரப்புரையினை - தமிழ்ச் சமுதாயப் பற்றாளரும் திரைப்பட இயக்குநருமான **திரு.தங்கர்பச்சான்** அவர்களின் தாக்கும் உரையோடு தொடங்குவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகிறோம்.

சொல்லத் தோணுது - **தங்கர் பச்சான்** தி இந்து தமிழ் ஏப்ரல் 26, 2015



- எதுவுமே அறியாத அப்பாவித் தமிழர்கள் தமிழகத்திலேயே குடும்பம் குடும்பமாக மதுவின் கொடுமையால் நாள்தோறும் பலியாகிக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா? சொந்த நாட்டிலேயே சொந்த மக்களை இலங்கை அரசு கொன்றழித்ததைப் போல தமிழ்நாட்டில் தமிழக மக்களை தமிழக அரசே மது என்னும் அரக்கன் மூலம் நிகழ்த்தும் கொலைகளைக் கணக்கெடுத்திருக்கிறோமா? மதுவுக்குப் பலியாகும் தமிழ்மக்கள் யாரிடம் நீதி கேட்பார்கள்? இன்னும் ஆறு / ஏழு ஆண்டுகளுக்குப்பின் தமிழ்நாட்டில் மதுவினால் ஏற்படும் உயிர்ப்பலிகள் இப்போது இருப்பதைவிட 10 மடங்குக்கு மேலிருக்கும்.

- தொடர்ந்து ஆண்டுவந்த அரசாங்களால் பலர் **குடி நோயாளிகளாக** ஆக்கப்பட்டதனால் இன்று விதவைக் கோலத்தில் கைப்பிள்ளைகளோடு தெருவில் பிச்சையெடுக்கும் குடும்பங்களின் கணக்கு யாரிடமாது உள்ளதா?

- குடும்பத்தைலைவனை இழந்து, குடும்பப் பாதுகாப்பினை இழந்து, சொத்துக்களை இழந்து, ஒட்டுமொத்தக் குடும்பத்தின் வாழ்க்கையே கேள்விக்குள்ளாக்கப்பட்டு அரசாங்கத்திடமே எல்லாவற்றுக்கும் கையேந்துகிற அவலம் ஒவ்வொரு நொடியும் பெருகிக் கொண்டிருப்பதை ஏன் யாருமே உணரவில்லை?

- சிறியதற்கும் பெரியதற்கும் (அநியாயங்களுக்கு) நீதிகேட்கும் அரசியல் கட்சிகள் மதுவுக்குப் பலியாகும் தமிழ்மக்களுக்காக எப்போது யாரிடம் நீதி கேட்கப் போகிறார்கள்?



**நீர் நிலம் வனம்.. கடல் எழுதிய திரு. சமஸ் என்பார்** - கடற்கரையோர மீனவர்களுக்கு இந்த **மதுக்குடி.. சுனாமியாக** வந்து அச்சுறுத்துகிறது என்கிறார்.

- **குடி சுனாமி..** இன்றைய தமிழகக் கடற்கரைப் பெண்கள் பெரும்பாலானவரைக் கதறவைக்கும் மாபெரும் பிரச்சனை.. குடி! கடற்கரை முழுக்க அழுகுரல்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் சேத்துக் குடி கொன்னுக்கிட்டிருக்கு. ஊரு முழுக்க வட்டிக்குக் கடன்வாங்கி வெச்சிட்டு குடும்பத்தையும் சந்தியிலே நிக்க வெச்சிட்டுப் போவுது இந்தக் குடி.



தமிழ்த் திரைப்படக் கலைஞர் - **தமிழ்ச் சமுதாய அக்கறையாளர் திரு. சிவகுமார்** அவர்கள் மதுவின் கொடுமைகளைப் பெரிதும் சாடுகிறார் இப்படி... **"குடிகாரன் எனும் பட்டம் நான்கு கொலைகளைச் செய்தவன் என்பதைவிடக் கொடுமையானது என்று மக்கள் நினைத்த காலம் மலையேறிப் போய்விட்டது. கடந்த 40 ஆண்டுகளில் குடிகாரர்களின் எண்ணிக்கையை விட குடிநோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது"** மதுவால் எல்லாவகையிலும் தீமையே ஏற்படுகிறது.

## 2. மதுவினால் விளைந்த தீய நிகழ்வுகள் - ஒரு பட்டியல் போதாது.

- 2002- 2003 இல் மாநிலத்தின் மதுவிற்பனை ரூ 2828கோடி
- 2013- 2014 இல் மாநிலத்தின் மதுவிற்பனை ரூ 21680 கோடி.

- மது குடிப்பதால் - குடிகாரராய் இருப்பதால் விளையும் தீய விளைவுகளைத் திரும்பத் திரும்பப் பட்டியலிட வேண்டியதில்லை. இதில் மாபெரும் முரண்பாடு இது தான்: **மது.... நாட்டுக்கு... வீட்டுக்கு... உயிருக்குக் கேடு** என்று சொல்லிக் கொண்டு - **ஓர் அரசே மதுவை மிகவும் முனைந்து விற்பதுதான்.**

- **மெல்லத் தமிழன் இனி...** நூலில் **திரு டி.எல். சஞ்சீவிகுமார்** எழுதியவை கீழே தொகுத்தளிக்கப்படுகின்றன.

**சென்னை சிந்தாதரிப் பேட்டை கூவம் குடிசை வாசி புஷ்பா (தாஸின் மனைவி)**



கண் கலங்கியவராய், "அது மட்டும் ஒழுங்கா இருந்திருந்துச்சுன்னா, இப்பிடி நாதியில்லாம நிப்போமா? குடிச்சுக் குடிச்சுப் பைத்தியம் முத்தியில்ல செத்துச்சு. அது பூடுச்சு. நாங்கதான் நெதம் சாவறோம்..." தாங்க மாட்டாமல் அழுகிறார்.

**டாக்டர் மோகன வெங்கடாசலபதி (சேலம்) சொல்கிறார்:**



"குடிநோய் என்பது குடும்ப நோய். **சமூக நோய்.** அது குடிப்பவரை மட்டும் பாதிப்பதில்லை. அவரைச் சார்ந்த அனைத்தையுமே பாதிக்கிறது. ஒருவர் குடிப்பதால், இழப்பு அவருக்கும் மட்டுமல்ல. அவரது குடும்பத்துக்கு இழப்பு. மொத்தத்தில் நாட்டுக்கே இழப்பு.

சாலை விபத்துகள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் முதல் இடத்தில் இருக்கிறது தமிழகம். கடந்த 2013-ம் ஆண்டு நடந்த 14,504 விபத்துகளில் 15,563 பேர் பலியாகியிருக்கிறார்கள்.

இதில் 70% மதுபோதையால் நடந்த விபத்துகள். குறிப்பாக 2002 முதல் 2012-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழகம் மிக மோசமாக **மதுபோதை விபத்துகளால்** பாதிக்கப்பட்டது என்கிறது மேலாண்மை மற்றும் தொழில்நுட்பத்துக்கான பன்னாட்டு ஆய்விதழ்.

**தற்கொலையிலும்** தமிழகம் முதலிடத்தில் இருப்பது நமக்கொல்லாம் பெரும் தலைக்குனிவு இல்லையா? சமீபத்தில் மத்திய சுகாதாரத் துறை **அமைச்சர் ஹர்ஷவர்தன்** வெளியிட்ட தேசிய சுகாதார விவரத் தொகுப்பில் தற்கொலைகளில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கு 2013-ம் ஆண்டு மட்டும் 16,927 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்!

டாஸ்மாக் ஊழியர் சங்கம் ஒன்றில் பொறுப்பில் இருக்கும் **தனசேகரன்** சொல்லும் தகவல் மிகவும் அதிர்ச்சி தருகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் சுமார் **2,500 டாஸ்மாக் ஊழியர்கள்** இறந்துவிட்டார்கள். கல்லீரல் வீங்கி, குடல் வெடித்து, தற்கொலை செய்துகொண்டு... இப்படி விதம் விதமாக. காரணம், மது அரக்கன். அவர்களுக்கெல்லம் வயது 30 முதல் 40 வரை மட்டுமே.

சோகம் அந்த 2,500 பேருடன் முற்றுப்பெற்றுவிட்டதா என்ன? சுமார் **2,000-க்கும் மேற்பட்ட பெண்கள்** கணவனை இழந்திருக்கிறார்கள். சுமார் 5,000 குழந்தைகள் தந்தையை இழந்திருக்கிறார்கள். சுமார் 5,000 அம்மா - அப்பாக்கள் அன்பு மகனை இழந்திருக்கிறார்கள். இவர்களின் எதிர்காலமெல்லாம் என்னவாவது?

மதுவின் கொடுமைகளுள் இப்படியுமா; நெஞ்சம் பதறுகிறது

- **ஈரோடு மாவட்டம் நெரிஞ்சிப்பேட்டை** அருகே இருக்கும் **கோயில் கரடு** கிராமம். அழகான குடும்பம் அது. மூன்று வயதில் ஒர் ஆண் குழந்தை. ஒன்றரை வயதில் பெண் குழந்தை. **திவ்யதர்ஷினி.** இப்போது திவ்யதர்ஷினி உயிரோடு இல்லை. தினமும் குடித்துவிட்டு வந்து பிரச்சினை செய்யும் கணவரின் சித்ரவதை தாங்காமல், பெற்ற குழந்தையையே கொன்றுவிட்டார் தாய். அதுவும் எப்படி? அரிவாளால் வெட்டி, அப்போதும் கோபம் தீராமல் தீவைத்து எரித்துக் கொன்றுவிட்டார்.
- எல்லாவற்றுக்கும் மேலாக, தனது 19 வயது மகளுக்குப் பல மாதங்களாகப் பாலியல் ரீதியாக நெருக்கடி கொடுத்திருக்கிறார் **ராமரத்தினம்.** உலகிலேயே ஒரு பெண் அதிகபட்சமாக நம்பக்கூடிய ஆண் தந்தைதான். அந்த நம்பிக்கையைத் தனது தந்தையே சின்னாபின்னமாக்குவதை ஒரு பெண்ணால் தாங்கிக்கொள்ள முடியுமா? தந்தையின் நெருக்கடியும் வக்கிரமும் தாங்க முடியாமல், வேறு வழியே இல்லாமல்தான் அந்தப் பெண் மதுவில் பூச்சிமருந்தைக் கலந்து கொடுத்து கொன்று விட்டார். உண்மையில், தனது நம்பிக்கையைப் படுகொலை செய்த ஒருவரைத்தான் அந்தப் பெண் கொலை செய்திருக்கிறாள்.
- ஏன் கணவனே பெற்ற மகளிடம் வன்புணர்வுக்கு வற்புறுத்த **தாய் பிருந்தா** ஓடி வந்து கணவனிடமிருந்து மகளை வெறித்தனமாக விடுவித்தவர், அதே வேகத்தில் மண்ணெண்ணெயை அவர்மீது ஊற்றிக் கொளுத்திவிட்டார். தன் மீதான தாக்குதல்களைத் தாங்கிக்கொண்ட தாய்மனம். தனது மகள் பாதிக்கப்படுவதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.
- எங்களுக்கு ஒரே மகன். எப்படியோ பத்தாவது படிக்கிறப்பயே மது குடிக்கப் பழகிட்டான். குடிநோய் முத்தி இப்ப வீட்டுல 24 மணி நேரமும் குடிக்கிறான். இப்படி கதறி அழுதார் தந்தை ஒருவர். "என்நிம்மதி பறிபோய் பனிரெண்டு வருஷமாச்சு. நானும் என் மனைவியும் ராத்திரியில் தூங்குறதே கிடையாது. எப்ப என்ன நடக்கும்னு பயத்துலயே இருக்கிறோம்.

- தேனி மருத்துவக் கல்லூரியின் சுகாதாரப் பார்வையாளராக இருக்கிறார் **சர்ச்சில் துரை.** அவர் சொல்லும் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன. "தென் மாவட்டங்களின் பல பகுதிகள் குடிநோய் மற்றும் வறுமையின் குறியீடுகளாக மாறியிருக்கின்றன. பெரும்பாலான கூலித் தொழிலாளர்கள் ஆண்/பெண் பாகுபாடு இல்லாமல் காலையிலேயே மது அருந்துகிறார்கள். ஒருபக்கம் வறிய மக்கள் அறியாமையால் மது அருந்துகிறார்கள் என்றால், மாணவர் சமுதாயம் இன்னமும் மோசம்.
- தேனியில் இருக்கும் ஒரு தனியார் கல்லூரியில் சுமார் 500 பேர் படிக்கிறார்கள். ஒருநாள் மருத்துவச் சோதனையின்போது அவர்களில் 80% பேர் மது அருந்தியிருந்தது கண்டு கடும் அதிர்ச்சி அடைந்தோம். அரசுப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு மாணவர்கள்கூட மது அருந்திவிட்டு வருவது சமீப காலங்களில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது" என்கிறார்!



எனவே, **மதுவின் மயக்கம் என்பது மரணம் வரை அழைத்துச் செல்லும்."** என்றார்.

- மது மொத்த மனித சமூகத்தையும் பாதிக்கிறது. அதே சமயம், **தலித் சமூகத்தை**, குறிப்பாக அந்த சமூகத்தில் இருக்கும் பிணவறைத் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், மலம் அள்ளும் தொழிலாளர்கள், இடுகாடுகளில் இறப்புச் சடங்குகளைச் செய்யும் தொழிலாளர்கள் - இவர்களிடையே மது ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் மிகமிக அதிகம். இதில் ஏராளமானவர்கள் முற்றிய குடி நோயாளிகள்.

## 3. மது விலக்குக்கு எதிரான மிகப்பெரிய தடைகள்

- தீயவை தீய பயத்தலால் தீயவை
  தீயினும் அஞ்சப் படும் - குறள் 202

இன்றைய நாளில் சமுதாயத்தின் எல்லாத் தட்டு மக்களும் எல்லாத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சமுதாய ஆர்வலர்களும் - ஏன் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் மதுவை எதிர்த்து — முழு மதுவிலக்கினைத் தமிழகத்தில் கொண்டு வர விரும்புகிறார்கள். பலர் தொடர் நடவடிக்கைகளையும் விடாது எடுத்து வருகின்றனர். ஆனால் இலக்கினை எட்ட அய்ந்து தடைக்கற்கள். அவை :

ஒன்று : மதுவினால் அரசிற்குக் கிடைக்கும் ரூ.30000 கோடி வருவாய்

இரண்டாவது : மதுத்தயாரிப்பாளர்கள் / மதுத் தரகர்களின் கொள்ளைப் பேராசை

மூன்றாவது : அரசியலார்க்கு மறைவாகக் கிடைக்கும் "ஊக்கத்தொகை"

நான்காவது : கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடும் என்ற குற்றச்சாட்டு

அய்ந்தாவது : இன்றைய டாஸ்மாக் பணியாளர்கள் 30000 பேர் வேலையிழப்பார்கள்.

இவற்றைத் தவிர... முழு மதுவிலக்கு வந்தால்... நடைமுறைப்படுத்தினால் டாஸ்மாக் பணியாளர்கள் பாதிக்கப்படமாட்டார்களா? நம் புதிய திட்டங்களில் 30000 டாஸ்மாக் பணியாளர்கள் அனைவருக்கும் உடனே உருப்படியான வேலை உறுதி செய்யப்படுகிறது. திசம்பர் 9, 2014 டாஸ்மாக் தொழிலாளர் அமைப்பு நடத்திய மாநில மாநாட்டில் தமிழ்நாட்டில் மது விலக்கு செயற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள் என்பது புது செய்தி.

**கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து மக்கள் அநியாயமாக மடியமாட்டார்களா?**

மதுவிலக்கு இல்லாத இன்றைய தமிழ்நாட்டில் தெருவுக்கு தெரு டாஸ்மாக் கடைகள் நாள் முழுவதும் திறந்து வியாபாரம் செய்யும்போதே - கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களின் மீது 2013ஆம் ஆண்டு 89,169 வழக்குகள் பதியப்பட்டு ரூ.4.85 கோடி மதிப்புள்ள ஊறல் பறிமுதல்; ரூ.1.46 கோடி மதிப்புள்ள மதுபாட்டில்கள் கைப்பற்றல் - (தினகரன் 2-4-2014); மேலும் 10 போலி மதுபான ஆலைகள் காவல் துறையால் மூடப்பட்டன. எனவே இது ஒரு வெற்றுச் சாக்கு; தீமைக்கு - தன்னலச் சப்பைக்கட்டு.

## 4. ரூ. 5.00 இலட்சம் கோடி கூடுதல் வருவாய் ஈட்டிட திட்டங்கள் / கருத்துரைகள்

1. நம்முடைய தமிழ்நாடு அரசு, ஆண்டு வருவாய் வரவுத் தொகையினைப் (Revenue Receipts) பெருமளவில் - பன்மடங்கு உயர்த்திட கீழ்க்குறிப்பிடப்படும் வழிவகைகளை உடனடியாகக் கடைபிடித்திட அரசு முன்வர வேண்டும்.

   உள்ளாட்சி அமைப்புகள் (பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சிகள்) தம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஏரிகள், கண்மாய்கள் மற்றும் குளங்களின் வண்டல் மண்ணை/ ஆழப்படுத்திட வெளிப்படையான ஏலம் விட்டு - அதிலிருந்து கூடுதல் வருமானம் ரூ.5000/- கோடி ஈட்டலாம் (தமிழ்நாட்டில் 39,202 ஏரிகள்/கண்மாய்களும், 5000க்கு மேற்பட்ட கோயில் குளங்களும் உள்ளன). இதன் மூலம் பெய்யும் மழை நீரைக் கூடுதலாக 150 டி.எம்.சி. அளவில் சேமித்து ஊற்று நீரைப் பெருக்கலாம் (Ground water recharge). வண்டல் மண் - ஆழப்படுத்தும் வெட்டு மண்ணை விற்பதால் ஆண்டுக்கு **ரூ.5000 கோடி**க்கு வருவாய் கிடைக்கும். **—— வேலை வாய்ப்பு 50000 பேர்**

2. தமிழ்நாட்டில் 1000க்கு மேற்பட்ட பெரிய கோயில்கள் இந்து அறநிலையத்துறை மற்றும் பிறவற்றின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தக் கோயில்களுக்கு - கோயில் அணுகு பாதைகளிலும் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஏராளமான வணிகக் கடைகளும் கட்டுமானங்களும் உரிமையாக உள்ளன. இவைபோக விளை நிலங்களும் சொந்தமாக உள்ளன. இவற்றிலிருந்து பெறும் வாடகை / குத்தகைப் பணம் 50 / 100 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டவை. மாதந்தோறும்/ஆண்டுதோறும் முழுமையாகவும் (50%) வசூலிக்கப்படுவதில்லை. நிலங்களையும் முறையாக வருவாய் ஈட்டத் தக்க வகையில் பயன்படுத்தினால் கூடுதலாக ஆண்டுக்கு **ரூ.5000/- கோடி**க்கு தமிழக அரசுக்கு வருவாய் கிடைக்கும். **—— வேலை வாய்ப்பு 5000 பேர்**

   எனவே, வாடகைப் பணமும் / குத்தகைப் பணமும் - ஒவ்வொரு சொத்திற்கும் உடமைக்கும் மறு ஆய்வு செய்து - தற்போது சந்தையில் நிலவும் வாடகை / குத்தகை விலை வீதங்களில் 25% கழிவு தந்து நிர்ணயம் செய்தாலே ஆண்டுக்கு ரூ.5000 கோடி கூடுதலாகக் கிடைக்கும். இவற்றை வசூலிக்க / ஒப்படைக்க / கண்காணிக்க என்று ரூ.100 கோடிச் செலவில் புதிய பணியாளர்களை (ஒப்பந்த அடிப்படையில்) HR & CE நியமித்துச் செயலாக்கிட வேண்டும். (மேலும் அரசுக் கணக்கில் வராத நிலங்கள் கண்டறியப்பட்டு கையகப்படுத்தப்படவும் வேண்டும்).

3. இதைப்போலவே தமிழ் நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் லட்சக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு (Revenue Porambokku PWD, Natham Porambokku etc) நிலங்கள் பரவிக்கிடக்கின்றன. இவை பற்றிய புள்ளி விவரங்கள் வருவாய்த்துறை சார்ந்த ஊர் நிர்வாக அலுவலர்களிடம் (Village

Administrative Officer) உள்ளன. இந்த நிலங்கள் முழுவதும் - கணக்கெடுக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு பதிவேடுகளில் பதியப்படவேண்டும். இந்த நிலங்களை அரசு மற்றும் அரசுசார்ந்த நிறுவனங்களின் பயன்பாட்டிற்கென மாற்றப்படவேண்டும் (Commercially, educationally, touristically) ஆண்டுக்கு **ரூ10000 கோடி**யளவுக்கு வாடகை/குத்தகை கிடைக்கும். மேலும் சமுதாயப் பகைவர்களால் இவை பயன்படுத்துவதும் கட்டுக்குள் வைக்கப்படும் என்பது நிச்சயம். இதற்கென ஒவ்வொரு மாவட்ட அளவிலும் எல்லா அரசுத்துறை/ அரசுசார் நிறுவன மாவட்ட அலுவலர் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்டு இவை காலமுறையில் கண்காணிக்கப்படவும் வேண்டும்.

**—— வேலை வாய்ப்பு 30000 பேர்**

4. அரசாங்கம் - இன்றைக்கு வழங்கிவரும் மானியம்/ இலவசங்கள் **வேளாண்மைத்துறை, நலத்துறை மற்றும் கல்வித்துறைக்குக் கண்டிப்பாகத் தொடரவேண்டும்.** கூடுதலாகவும் வழங்கப்படவேண்டும். ஏனெனில் இவை அரசின் தலையாய பொறுப்புமிக்க கடமைகள். மாறாக மக்களைச் சோம்பேறிகளாக்கும் - ஏன் பிச்சைக்காரர்களாக்கும் இலவசங்கள் (Mixi, Grinder, TV, Fan,etc) வாக்கு வங்கிக்காகவே வழங்கப்படும் இலவசங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். **ஏற்பது இழுக்கு** எனும் **அவ்வையாரின் ஆத்திச்சூடி** பெரிதாகப் பரப்புரை செய்யப்பட்டு - குறைந்தது தன்மானம் - உழைக்கும் தன்னம்பிக்கையினை மக்களிடையே உருவாக்கிட அனைவரும் முன்வரவேண்டும். இதன் மூலம் ஆண்டுக்கு **ரூ.5000/- கோடி** மிச்சமாகும்.
5. இவற்றைத்தவிர - அரசின் வருவாயினைப் பன்மடங்கு பெருக்கிடும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் உடனே செயற்படுத்திடவேண்டும்.

- தமிழ் நாட்டில் 12527 கிராம ஊராட்சிகளும். 561 நகர (பேரூராட்சிகளும். 150 நகராட்சிகளும், 12 மாநகராட்சிகளும் இன்று இயங்குவதாக அரசுப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்தம் ஆட்சி எல்லைகளுக்குள் கடந்த 50 ஆண்டுகளில்.
- இலட்சக்கணக்கான புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.
- ஆயிரக் கணக்கான வீடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

I. புதுப்புது வீட்டுமனைகள் (Housing Layouts + Conversion (5.00 இலட்சம்) போடப்பட்டு மாற்றம் செய்யப்பட்டு நிறைந்த அளவில் எங்கு பார்த்தாலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதை முறைப்படுத்தினாலே கூடுதலாக **ரூ.2,00,000/- கோடி** வருவாய் கிடைக்கும்.

**—— வேலை வாய்ப்பு 50000 பேர்**

II. பெரும்பாலான ஆனால் கட்டப்பட்ட புதிய வீடுகளுக்கு பலவற்றுக்கு (50%) இந்நாள்வரை சொத்துமதிப்பீடு செய்து - புதிதாக **சொத்துவரி** விதிக்கப்பட்டு, **விரிவாக்கம்** செய்யப்பட்ட வீடுகளுக்கு கடந்த 25ஆண்டுகளாகவே திருத்திய சொத்துவரி (Property Tax) விதிக்கப்படவுமில்லை, அவை வசூலிக்கப்படவும் இல்லை - இவ்வகையில் **ரூ 1,00,000 கோடி** கூடுதலாக வசூலிக்கலாம். **—— வேலை வாய்ப்பு 10000 பேர்**

III. இந்த சொத்துவரி விதிப்பு - குறைந்தது 5ஆண்டுகளுக்கு ஒருமுறை சொத்தின் மதிப்பு உயர்வதற்கொப்ப (According to Land Guide Line Value & Construction Cost) திருத்திய சொத்துவரி விதிக்கப்பட்டு முழுமையாக வசூலிக்கப்படவும் வேண்டும் இதன் மூலம் **ரூ.50,000 கோடி** கூடுதலாக கிடைக்கும்.

IV. இவைதவிர கடந்த 20ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளில் (Village Panchayats, Town Panchayats, Municipalties & Corporations) - இவற்றின் வரவு செலவு கணக்குகள் சரியாக தணிக்கை செய்யப்பட்டு (Through Local fund Audits) **நிதி இழப்புக் குறிப்புரைகள்** எழுதப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது இத்தகைய உள்ளாட்சி நிறுவனங்களோ தலைமைச் செயலக (Commissioner of Municipalities & Local Bodies) அதிகாரிகளோ எந்தவித உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு மட்டுமே - **ரூ.20,000/- கோடி**களைத் தாண்டுகிறது. —— **வேலை வாய்ப்பு 1000 பேர்**



(மேற்குறிப்பிட்ட தகவல்கள் விருத்தாசலம் நகராட்சித் தலைவராக (2006 - 2011) இருந்த Dr.மு.வள்ளுவன் (M-94431 81674) / email id:drmvalluvan@yahoo.com அவர்களால் RTI மூலமாகத் தொகுக்கப்பட்டு - வேண்டப்பட்டு மேல்நடவடிக்கை ஏதும் இல்லாமையால் சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No 22645 of 2011ஆக இன்றும் நிலுவையில் உள்ளது.

இதற்குத் தலையாய காரணம் - இந்த உள்ளாட்சி செயல் அலுவலர்கள் / தலைவர்கள், மன்ற / மாமன்ற உறுப்பினர்கள் / உள்ளாட்சித்துறை மேல் அலுவலர்கள், அரசியல்வாதிகள் இவர்களின் கூட்டுச்சதிதான் (Cumulative - Unholy nexus - Criminal Conspiracy) இந்த ரூ.20000/- கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமல் உள்ளது. உள்ளாட்சித்துறைகளில் மேலே தெரிவித்த 4 செயல்களை உருப்படியாக விரைவாகச் செய்தாலே அரசாங்கத்திற்கு **ரூ.3.70 இலட்சம் கோடி**கள் கூடுதலாக வருவாய் கிடைக்கும். இத்தெகையினைக் கொண்டு தமிழ்நாட்டை மட்டுமன்று இந்தியாவையே புரட்ட முடியும்.

6. இன்றைய நாளில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி மாநகரங்களிலும் பிற இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் பேரூர்களிலும் சென்னை / புதுச்சேரி போன்ற ஊர்களில் பல புதிய கார் நிறுவனங்கள் 20 ஆண்டுகளில் நிறுவப்பட்டு - வங்கிக்கடன் வசதியோடு இலட்சக்கணக்கான மகிழுந்துகள் மற்றும் ஊர்திகள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படும்

01.05.2015-இல் தமிழ்நாட்டில் இருக்கும் ஊர்திகளின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| 2 சக்கரம் | - | 170 லட்சம் |
| 3 சக்கரம் | - | 2.50 லட்சம் |
| 4 சக்கரம் | - | 23 லட்சம் |
| பிற வண்டிகள் | - | 9.50 லட்சம் |

(Data are available from Tamilnadu State Transport Authority).

ஆனால் இவற்றுள் 30% ஊர்திகளுக்குக் கூட வீடுகளினுள், நிறுவனங்களினுள் நிறுத்தும் வசதிகள் (Parking Facilities) இல்லை. எனவே 70% ஊர்திகள் - எல்லா ஊர்களிலும் தெருவோரங்களில் / சாலையோரங்களில் (Street Parking/Road Parking) நிறுத்தப்பட்டுள்ளன. இவை பிற ஊர்திகள் அப்பகுதி மக்கள் போய் வர பெரிய இடைஞ்சலாக உள்ளமையை ஒவ்வொரு நாளும் நாம் உணர்கிறோம். எனவே இப்படி தெருவில் / சாலையோரங்களில் நிறுத்தப்பட்டுள்ள எல்லா ஊர்திகளும் (2 சக்கர / 3 சக்கர / 4 சக்கரங்கள் உடையவை) முறையாகக் கணக்கெடுக்கப்பட வேண்டும். இதற்கென இன்று பணியிலிருக்கும் போக்குவரத்துக்காவலர் மற்றும் வேலையில்லாப் பட்டதாரிகளின் சேவை (ஒப்பந்த

முறையில்) மூலமாக - இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை - குறிக்கப்பட்டு இந்த ஊர்திகள் உரிமையாளர்களிடமிருந்து மாத வாடகை / ஆண்டு வாடகை / அரையாண்டு வாடகையாக கட்டாயமாக வசூலிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| இருசக்கர ஊர்திகள் | - ரூ.100/- (மாதத்திற்கு) | ரூ.1000 (ஆண்டுக்கு) |
| மூன்று சக்கர ஊர்திகள் | - ரூ.200/- (மாதத்திற்கு) | ரூ.2000 (ஆண்டுக்கு) |
| நான்கு சக்கர ஊர்திகள் | - ரூ.500/- (மாதத்திற்கு) | ரூ.5000 (ஆண்டுக்கு) |

இப்படி வசூலித்தால் மட்டுமே ஆண்டுக்கு **ரூ.10000 கோடி** கூடுதல் வருவாயாகக் கிடைக்கும்.

அத்துடன் இந்த Street Parking சங்கடங்களும் குறைந்து - விபத்துக்களும் குறைய வாய்ப்புண்டு. இதற்காக இன்றைய Traffic Constables சந்திகளில் பகல் நேரத்திலிருந்து விடுவிக்கப்பட்டு - இரவு நேரங்களில் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். —— **வேலை வாய்ப்பு 25000 பேர்**

7. தமிழ்நாட்டில் சரித்திர / வரலாற்று முக்கியம் வாய்ந்த கோயில்கள் இருக்கிற நகரங்கள் / ஊர்கள் / இடங்கள் 3000 எண்ணிக்கையினைத் தாண்டும். இவற்றை எல்லாவித கட்டமைப்பு வசதிகளோடும் விரிவாக்கிட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகமும் இந்து அறநிலையத்துறையும் ஆண்டுதோறும் மிகக்குறைந்த நிதியையே செலவு செய்கின்றன. இவற்றைத் தவிர ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, திற்பரப்பு, ஏலகிரி, டாப்சிலிப், வால்பாறை, போன்ற மலை வாழிடங்களும் உள்ளன. இவற்றில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு மிகக்குறைந்தது **ரூ.5000/- கோடி** சுற்றுலா வரி / வருவாய் உறுதியாகக் கிடைத்திடும். இச்சமயத்தில் கேரளா, புதுச்சேரி, கோவா, மேற்குவங்கம், காஷ்மீர் வடகிழக்கு மாநிலங்கள் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10000/- கோடிக்கு சுற்றுலா வரி (Tourist Taxes) மூலமாக வருவாய் ஈட்டுகின்றன என்பது குறிப்பிட்டு உரைக்கப்படுகிறது. ——
**வேலை வாய்ப்பு 4000 பேர்**

8. பன்னாட்டு நிறுவனங்களுக்கு (Multinational Companies under Special Economic Zones) - தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கு இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு **ஆண்டுக்கு / ஏக்கருக்கு ரூ.1.00/- குத்தகைப்பணம்**, தண்ணீர் வழங்கல் **(1000 லிட்டர் - வெறும் 50 காசுகள்),** மின் வழங்கல், இவற்றிற்கு மிகக் குறைந்த விலை வீதத்தில் (1/10 விலையில்) தரப்படுகிறது இந்த பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்கு மிகக் குறைந்தது ரூ.1000/- கோடி இலாபத்தை ஈட்டி தம் நாட்டிற்குக் கொண்டு செல்கின்றன. இக்கொள்கையினை மாற்றி - நம் நாட்டு நிறுவனங்களுக்கு மக்களுக்கு வழங்கும் விலை விகிதத்திலேயே வழங்கினால் - தமிழ்நாட்டு அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு **ரூ.20000/- கோடி** மிச்சமாகும். (நிலம், மின்சாரம், தண்ணீரால் மட்டுமே) இதைச் செய்வதால் பெரும் பாதிப்பு நேராது என்று நம்புகிறோம்.

9. தமிழ் நாட்டில் இயங்கும் அரசுத்துறை அலுவலர்களின் ஊதியம் மற்றும் பிற படிகள் பெற - ஊதியப் பட்டியல் தயாரித்து மாவட்ட கருவூலங்கள்/ துணைக்கருவூலங்கள் இவற்றில் முன்தணிக்கை செய்யப்பட்டு - இசைவு பெற்ற பின்னரே அலுவலர்க்கு வழங்கப்படுகின்றன. கருவூலங்கள்/ துணைக்கருவூங்கள் நம்மையாண்ட ஆங்கிலேயர்தம் **அலுவலரை நம்பாத எச்சங்கள்.** இன்றைய காலங்களில் கருவூலங்களில் நடைபெறும் எக்கச் சக்கமான காலதாமதங்களும் மிகப் பெரிய

லஞ்சநடவடிக்கைகளும் சொல்லிமாளாதவை. இத்தகைய ஊதிய வழங்கலில் தவறுகள்/ குளறுபடிகள்/கூடுதல் தொகை ஏற்பட்டால் இவை எந்தப் பொறுப்பையும் ஏற்கமாட்டா. எனவே அரசு ஊழியரின் ஊதியப் பட்டியல்களைத் தயாரித்து வழங்கும் அரசு அலுவலர்களுக்கே முழு அதிகாரத்தையும் பொறுப்பையும் ஒப்படைப்பது - இருவகைகளில் பயனளிக்கும். கருவூல அலுவலர் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்பட்டு (மீதமுள்ளோர் வழங்கப்பட்ட பட்டியல்களைப் பின்தணிக்கை (Post audit) செய்யப் பணிக்கப்படுவர். லஞ்சம்/ ஊழல் பெருமளவு குறைய வாய்ப்புண்டு. தேவையற்ற வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் காலதாமதமும் குறையும்.

10. கடந்த 30 ஆண்டுகளில் மாவட்டஆட்சியர்களின் வேலைப்பளுவும் அதிகாரங்களும் எந்தவித வரைமுறையின்றியும் முறையான சீரமைப்புமின்றியும் பெரிதுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அரசியல்வாதியும் அமைச்சரும் - மாவட்ட ஆட்சியாளர் இன்றி எந்த வேலையும் நடக்காது (அணுவும் அசையா) என மடத்தனமாக நம்பிக்கொண்டுள்ளனர். மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் மந்திரக்கோல்(கள்) மாவட்ட ஆட்சியாளரிடம் இல்லை. மாற்றாக திரிபு வேலைகளுக்கும் வளர்ச்சித்திட்டங்களைத் தடுப்பதற்கும் அரசியல்வாதிகளின் தில்லு முல்லுகளுக்கும் துணை போகும் அமைப்பாகவே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இன்று அமைந்துள்ளது. ஆற்றுமணல் கொள்ளைக்கும் மதுக்கடைகளின் முறைகேடுகளுக்கும் உடந்தையாக இருப்பவர் மாவட்ட ஆட்சியாளரே. எனவே மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசியல் சட்டங்களில் வரையறுக்கப்பட்ட **வருவாய் வசூலித்தல் மற்றும் சட்டம் ஒழுங்கைக் காத்தல்** தவிர வேறு எந்த வேலையும்/ அதிகாரமும் இவர்களுக்கு வழங்கப்படக் கூடாது. மாறாக அரசு நலத்திட்டங்களையும் குறிப்பாக வளர்ச்சித் திட்டங்களையும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொடங்கி - குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றும் பொறுப்பு முழுவதையும் அதிகாரங்கள் அனைத்தையும் அந்தந்த மாவட்ட/ மண்டல/ மாநிலத்தலைமைகளுக்கே உடனடியாக வழங்கிடவேண்டும். இதனால் விளையும் நன்மைகள் இவை (குறிப்பாக பொறியியல், அறிவியல், வேளாண்மை, தொடர்பான துறைகளில்) **___ வேலை வாய்ப்பு 4000 பேர்**

மாதந்தோறும் நடைபெறும் எண்ணற்ற ஆய்வுக் கூட்டங்களுக்கு வரும் பலதுறை அரசு அலுவலர்களின் பயணப்படி (TA&DA)கள் கோடிக் கணக்கில் குறையும் அரசு அலுவலர்களின் தேவையற்ற அலைச்சல் குறைந்து அரசுவேலைகளில் கவனம் செலுத்திடப் போதிய அவகாசம் கிடைக்கும்.

11. அந்தந்த வளர்ச்சித்துறைகளின் மாவட்ட/ மண்டல/ மாநிலத் தலைமைகளுக்கே முழு அதிகாரங்களோடு முழுப்பொறுப்புகளும் (Full responsibility & accountability) அளிக்கப்படுவதால் திட்டவேலைகள் அனைத்தும் திட்ட மதிப்பீட்டிலும் திட்டகாலத்திற்குள்ளும் நிறைவேற்ற வழிகை பிறக்கும். அதனால் தேவையற்ற திருத்திய திட்டச் செலவுகள் (Time run & Cost run expenditure) எழாமல் அரசுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானகோடி மிஞ்சும். மாவட்ட அரசியல் தலையீடுகளும் பெருமளவில் குறையும்.

- எல்லாப் பொறியியல் அறிவியல் - வேளாண்மை தொடர்பான வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் வட்டார வளர்ச்சி அலுவலர் (Block Development Officer – BDO) கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இவர்கள்தாம் ஊரக - உள்ளாட்சி வளர்ச்சிப்பணிகளின் தரத்தைக் குறைப்பவர்கள் அரசியல்வாதிகளின் முகவர்கள். இவர்களால் அரசுக்கு ஏற்படும் நிதி விரையம் பல ஆயிரங்கோடிகளைத் தாண்டும். முன்பு தெரிவித்தது போல் இத்தகைய வளர்ச்சித் திட்டப் பணிகளின்

செயலாக்கத்தினை அந்தந்த சிறப்புத் துறைகளின் வட்ட/ மாவட்ட/ மாநிலத் தலைமைகளோடு இணைத்தால் நிதிச்சேதம் குறையும்; காலதாமதம் கட்டுப்படுத்தப்படும்.


12. மாபெரும் வளர்ச்சித் திட்டங்கள் - இன்றைய அளவில் **மாநில/ மத்திய அரசால் உலக வங்கி / ஆசிய வளர்ச்சி வங்கி/ பன்னாட்டு நிதித் தொகை** மூலமாகவே கடனைப் பெற்று நிறைவேற்றப்படுகின்றன. இதனுள் பன்னாட்டு ஆலோசகர்கள்/ கருத்துரையாளர்கள், தேசிய ஆலோசகர்கள்/ கருத்துரையாளர்கள்/ மாபெரும் வணிக நோக்கு நிறுவனங்களின் தொடர்போடு - திட்டமதிப்பு, கடன்தொகை வழங்கல், பிறசெலவுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. இத்தகைய திட்டங்கள் வகுத்தலில்/ செயலாக்கத்தில் - ஒவ்வொருதிட்டமதிப்பீடும் 3முதல் 10 மடங்கு வரை (உண்மையில் தேவைப்படும் திட்டச் செலவைவிட) வேண்டுமென்றே கூட்டப்பட்டு, இத்தொகையில் 20% முதல் 25% வரை தொடர்புடையவர்களுக்கு ஊக்கத்தொகை என்ற பெயரில் லஞ்சப் பணமாகச் செல்லுகிறது. இது பெரிய Vicious - Virus Circle (Unholy nexus between WB officials, Politicians and our Govt Officials in boosting the plan expenditure & looting Crores of money in every Project). எனவே இந்த முறையினை நீக்கினால் ஆண்டுக்கு **ரூ.35242/- கோடி**வரை நம் நிதிச்சுமை குறையும். இப்படி வளர்ச்சித்திட்டங்களின் மதிப்பீடுகளை (DPRs)- உள்நாட்டு மாநில வல்லுநர்களாலும் - ஓய்வுபெற்ற நேர்மையும் திறமையும் உடைய பொறியாளர்கள்/ பிறதுறை திறனாளர்களால் சரிபார்க்கப் படவேண்டும் (Precheck / Prewetting). இந்த நாட்டுக்கு - இந்த மாநிலத்திற்கு ஏற்ற வகையில் அவை நிறைவேற்றப்பட வேண்டும். .

- நம் நாட்டு வளர்ச்சி திட்டங்களுக்கு **Nabard வங்கி, LIC வங்கி மற்றும் உள்நாட்டு வங்கிகள் நிதி** முனையங்களில் இருந்து கடன் பெறும் முறையினை அமல்படுத்த வேண்டும். நம் நாட்டு வளர்ச்சி திட்டங்களுக்கு உலக வங்கி/ பன்னாட்டு நிதி நிறுவனங்களில் பல்லாயிரக்கோடி கணக்கில் கடன் வாங்குவதால் திட்டச் செலவுகள் கூடுவதோடு - இந்தக் கடன்களுக்கு நாம் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய வட்டித்தொகை மட்டுமே பல்லாயிரம் கோடிகளைத் தாண்டுகிறது (இந்த ஆண்டு தமிழக அரசின் கடன்களுக்கான வட்டித் தொகை மட்டுமே **ரூ.17000/- கோடி** ஆண்டுக்கு. ஒட்டுமொத்தக் கடன் தொகை ரூ 1.81 லட்சம் கோடி (2015)).
- இத்தகைய கடன்கள்/ கடன்களுக்கான வட்டித் தொகையைக் குறைத்தாலே நம்முடைய தமிழ்நாட்டு அரசுக்கு **ரூ.20000/- கோடி** ஓர் ஆண்டுக்கு மிச்சமாகும். எனவே இம்முறையினை முற்றிலுமாகத் தவிர்த்து நம்நாட்டிற்குச் சொந்தமான Nabard வங்கி, LIC வங்கிகள் மற்றும் தேசிய வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டிவீதத்தில் (@ 4% Interest rate) கடன் வாங்கலாம்; PPP (Public Private Partnership) மூலமாகவும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றினால் நம் மாநில நிதிச்சுமையும் கடனுக்கான வட்டித்தொகையும் பெரிய அளவில் குறையும்.

13. இன்று தண்ணீர் - அதுவும் குடிநீர் - மிகப்பெரிய வணிகமாய் வளர்ந்துள்ளது - குறிப்பாக பன்னாட்டு வணிக நிறுவனங்கள் (Coco Cola, Pepsi, Aquafina, Kinley, Reliance, Tata etc) நம்முடைய ஆற்று நீரை - ஊற்று நீரை (1000 லிட்டரை ரூ.0.50க்கு வாங்கி) - அதைப் போத்தலில் அடைத்து 1 லிட்டர் குடிநீரை ரூ.15/- ரூ.20/-க்கும் இங்கேயே நம்மிடமே விற்று கொள்ளை இலாபம் அடிக்கின்றனர். இதனால் தமிழ்நாட்டில் ஊற்று நீர் (Ground Water) - 1000 அடிக்குக் கீழே போய் விட்டது. **மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது அரசின் தலையாய கடமை.** உலக வங்கி ஓதுவதைக் கேட்டுக்

கொண்டு தண்ணீரை வியாபாரப்பொருளாக மாற்றுவது நம் அரசியல் சட்டத்திற்கு எதிரானது, முரணானது. எனவே இந்த கொள்கையினை மாற்றி அரசே பாதுகாக்கப்பட்ட குடிநீரை 1 லிட்டர் ரூ.1.00-க்கு கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். இதன் காரணமாக இன்று அரசுக்கு குடிநீர் வழங்குவதற்காகச் செய்யும் செலவில் கணிசமான தொகை குறையும். (Avoiding supply of drinking water through hired lorries in each town / city at exhorbitant rates) இதனால் குடிநீருக்கான ஒதுக்கீடும் நம் நிதி நிலை அறிக்கையில் பெருமளவு குறையும். **—— வேலை வாய்ப்பு 20000 பேர்**

14. தென்மாவட்டங்களிலிருந்து - குறிப்பாக கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து தாதுமணல் எடுப்பு / வணிகம் என்பது தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. இத்தாது மணல் வணிகம் மூலமாக தனியார் நிறுவனங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.30000 கோடிக்கு மேல் வருவாய் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு அரசே இவ்வணிகத்தை மேற்கொண்டு (Through Govt. owned company) எடுத்து நடத்தினால் தாதுமணல் கொள்ளை தடுக்கப்படுவதோடு - அரசிற்கு ஆண்டொன்றுக்குக் குறைந்தது **ரூ.10000 கோடி**யாவது கூடுதல் வருவாய் கிடைக்கும். **—— வேலை வாய்ப்பு 1000 பேர்**

15. 
தமிழ்நாட்டு அரசுக்குச் சொந்தமான அனல் மின்நிலையங்களை நவீனப்படுத்தியும், புதிய அனல்மின் நிலையங்களைக் கட்டியும் நமக்கு வேண்டிய மின் சக்தியை நாம் எளிதாக உற்பத்தி செய்ய முடியும். தனியார் நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை கூடுதல் விலைக்கு ரூ.7 முதல் ரூ.14 வரை/ ஒரு யூனிட் வாங்க வேண்டியதை படிப்படியாகக் குறைக்கலாம். இதன் மூலம் தமிழக அரசுக்கு ஓராண்டுக்கு கூடுதலாக ஆகும் **ரூ.2758.25 கோடி**யைக் குறைத்திடலாம் என மின் பொறியாளர் கூட்டமைப்பின் தலைவர் **பொறி.சா.காந்தி** அவர்கள் தெரிவிக்கிறார். இது அனைவர் தம் (தமிழக அரசியல் கட்சிகளின்) அழுத்தமான கோரிக்கையும் கூட.

16. 
இவ்வாறே தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை மோசமாக இருப்பதாகவும், ஏறக்குறைய ரூ.2000 கோடி/ஆண்டொன்றுக்கு இழப்பு எனவும் அரசு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தனியார் நடத்தும் போக்குவரத்து நிறுவனங்கள் (குறைந்த எண்ணிக்கையில் என்றாலும்) ஆண்டுக்கு ஆண்டு பெரும் இலாபத்தைச் சம்பாதிக்கும் போது அரசுப்போக்குவரவுக் கழகங்கள் மட்டும் - இழப்பில் இயங்குகின்றன என்பது மோசமான மேலாண்மைக்கும் பொய்யான கணக்குக்கும் எடுத்துக்காட்டு. **Er. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன்** அவர்கள் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தபோது (1973-75) நேர்மையான திறமை மிக்க பொதுப்பணித்துறை - நெடுஞ்சாலைத்துறை மேல்நிலைப் பொறியாளர்களை இந்நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர்களாக நியமித்து - ஒரே ஆண்டில் நட்டத்திலிருந்து லாபம் ஈட்டச் செய்தார் என்பதை இச்சமயத்தில் குறிப்பிட விரும்புகிறோம். இதையொட்டியே IAS அதிகாரிகளை எடுத்துவிட்டு திறமையும், நேர்மையும் மிக்க இயந்திரப் பொறியாளர்களை (அரசுத்துறைகளிலிருந்து) நியமித்தால் இப்போதைய இழப்பான **ரூ.2000/- கோடி**யை உடனடியாகத் தவிர்க்கலாம்.

- **2.00 இலட்சம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு**

- மேலே குறிப்பிட்ட வேலைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்திட, அந்தந்தத் துறையிலுள்ள அரசுப் பணியாளர்களால் மட்டும் இயலாது (பல அரசுத்துறைகளில் 20% மேலேயே காலிப்பணியிடங்கள் பல்லாண்டுகளாக வேண்டுமென்றே நிர்வாகச் சீர்கேடுகளால் நிரப்பப்படாமல் உள்ளன.) இதனால் வேலை கிடைக்காத இளைஞர்களின் துயரம் பெரிது.

- மேலும் இன்றுள்ள அரசியல் - நிர்வாகச் சமுதாயச் சூழலில் அரசியல் குறுக்கீடுகளால் அரசு அலுவலர் பலரும் தமக்குரிய வேலைகளைக் கூட சமுதாய அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செய்திடத் தயக்கம் காட்டுகின்றனர். பல நிகழ்வுகளில் எதிர்மறை அணுகுமுறைகளையே கடைபிடிக்கின்றனர். (துறைத்தலைவர்கள் வழிகாட்டிப் போதிய பாதுகாப்பும் தருவதில்லை என்பது கூடுதல் செய்தி)

- எனவே நாம் குறிப்பிடும் வேலைகள் - கூடுதல் வேலைகள் (Additional Works) எனக்கருதி - இவற்றைக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் செய்ய வேண்டியிருப்பதால் - இதற்கெனக் கூடுதல் பணியாளர்களைக் கண்டிப்பாக நியமித்துச் செயல்பட வேண்டும். இது மிக மிக அவசியம்; அப்போது தான் நாம் மேலே குறிப்பிட்ட கூடுதல் வருவாய் இலக்கை எட்ட முடியும்.

- இன்றுள்ள அரசாங்க பணி நடைமுறை விதிகளில் - இக்கூடுதல் பணியாளர்கள் **தமிழ்நாடு பணியாளர் தேர்வுக் கழகம்** / அந்தந்த அமைப்பின் பணியாளர் நியமன வாரியம் / தேர்வுக்குழு வாயிலாகவே தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கு நடைமுறைச்சடங்குகள் உள்ளன. பணியாளர்களை நியமிக்க நீண்ட நாட்கள் (10 முதல் 20 மாதங்கள் வரை) ஆகும். இடையில் உயர்நீதிமன்றத்தின் தேவையற்ற இடைக்காலத் தடையாணைகள் வேறு. இவற்றைத் தாண்டிப் போக வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே கூடுதல் பணியாளர்கள் (முழு நேர அரசு ஊழியர்களாகக் கருதப்படாமல்) குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்தத் தொழிலாளர்கள் / ஊழியர்களாக மட்டும் கருத வேண்டும். (Engaging them on Service Contract basis. There is an order for the same issued by GOTN during 2002-2003 at the initiative of Dr.A.M.Swaminathan IAS (Retd). அதில் கூறப்பட்டுள்ள வழிகாட்டி நெறிகளை மட்டும் முழுமையாகக் கடைபிடித்தால் போதுமானது. அதன்படி 20 நாட்களுக்குள் இவர்களை நியமித்திடலாம். இவர்களின் ஊதியம் திட்டச்செலவுகளிலிருந்து நேரிடையாக வழங்கப்படும்.

- இதன்படி அந்தந்த ஊரை / பேரூரை / சிறு நகரத்தை / நகரத்தை / மாநகர எல்லைக்குள் வசிக்கும் - அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களில் - தேவைப்படும் கல்வித்தகுதி உடையவர்களை மட்டும் அந்தந்தத் துறை சார்ந்த மாவட்ட அலுவலர்க்கு அதிகாரம் தந்து **மூப்பு அடிப்படையில்** தேர்வு செய்து நியமித்துக் கொள்ளலாம். இப்பணி 1 மாதத்தில் நிறைவு பெறும் துறைசார்ந்த ஓய்வு பெற்ற அரசு ஊழியரையும் மேற்கண்ட முறையில் பணியமர்த்திக் கொள்ளலாம். இவர்களும் Service Contract முறைப்படியே நியமிக்கப்பட வேண்டும்.

- இதன் வாயிலாகப் படித்த - தகுதியுள்ள - வேலையில்லாதவர்கள் - பல ஆயிரம் பேர்களுக்குத் தற்காலிகமாக (குறைந்தது 2.00 இலட்சம் இளைஞர்களுக்கு) வேலை கிடைக்கும். வேலைகளின் பளு தொடர் வேலைகளைக் கருதி இவர்களுள் பலரை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் தொடர்ந்தும் பணியில் அமர்த்தி கொள்ளலாம். இவர்களுக்கு தரப்படும் மாத ஊதியம் ரூ.10000/- முதல் ரூ.15000 / 20000/- வரையே (Service Contract) இருக்கும். ஓர் ஆண்டுக்கு ரூ.3600 கோடி மட்டுமே

ஊதியமாக செலவாகும். இவர்தம் உதவியால் - உழைப்பால் வசூலிக்கப்படும் நிதித்தொகையில் - ஊதியங்கள் 1%க்குள்ளேயே இருக்கும்.

| | |
|---|---|
| 60000பேர் x மாத ஊதியம் ரூ.10000 x 12 | = ரூ. 720 கோடி |
| 100000பேர் x மாத ஊதியம் ரூ.15000 x 12 | = ரூ. 1800 கோடி |
| 40000பேர் x மாத ஊதியம் ரூ.20000 x 12 | = ரூ. 960 கோடி |
| இதன் தொடர்பாக பிற செலவுகள் | = ரூ. 120 கோடி |
| 2.00 லட்சம் பேர் மொத்தச்செலவு | = ரூ. 3600 கோடி |

(இச்செலவு மொத்த வருவாயில் 0.72% மட்டுமே)


- இதில் அரசியல் குறுக்கீடுகளைத் தவிர்க்க வேண்டியதும் மிக மிக முக்கியம். (ஏனென்றால், தமிழக அரசின் இன்றைய சாபக்கேடே அரசியல்வாதிகளின் குறுக்கீட்டால் பல நல்ல வளர்ச்சி / ஆக்கபூர்வமான திட்டங்கள் நடைபெறாமல் முடங்கிக் கிடப்பதே).

ஆண்டொன்றுக்கு (ரூ.30,000 கோடிகளுக்குப் பதிலாக) ரூ.5.00 இலட்சம் கோடிகளை கூடுதல் வருவாய் ஈட்டித்தரும் கருத்துரைகள் / முன்னோடித்திட்டங்கள் தந்துள்ளோம். இவை அனைத்தும் எங்களின் 45 ஆண்டுக்கால அரசு நிர்வாகத்தின் அடிப்படையிலும் பிசிறில்லா புள்ளிவிவரங்களின் அடிப்படையிலும் ஒரு பொறியாளராக - ஒரு நகராட்சியின் தலைவராக - 2016ஆம் ஆண்டை மதுவில்லாத ஆண்டாகத் தமிழகத்தை மாற்றப் பாடுபடும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பொறுப்பாளராக - அக்கறையுடனும் பொறுப்புடனும் தரப்பட்டுள்ளன என்பது உறுதியளிக்கப்படுகிறது. இதைப்படித்தாவது நம் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் பொறுப்பான அரசு அதிகாரிகள் (IAS & IPS) புதியதாக கொள்கையை மாற்றுவார்களா? புதிய பாடம் படிப்பார்களா? இந்த நிலையிலாவது சீரழிந்த தமிழ்மக்களைக் கடைத்தேற்ற முன்வருவார்கள் என்று நம்பலாமா?

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் மிகக்குறைந்தது இரண்டு லட்சம் படித்த வேலையில்லாத இளைஞர்கட்கு (டாஸ்மாக் நிறுவன இன்றைய 30000 பணியாளர்களுக்கும் சேர்த்து) உடனடியாக வேலை கிடைக்கும் என்ற உறுதிமொழியும் தரப்படுகிறது. ஆனால் எல்லாமும் திறந்த நடைமுறைகள், அரசுப்பொறுப்பு / கடமை மற்றும் நல்லது செய்ய வேண்டும் எனும் நேர்மறைச் சிந்தனையோடு செய்யப்பட வேண்டும்.

## 6. **நல்லோரின் நன்முயற்சிகள்** இன்று வரை நற்பயனை அளிக்கவில்லையே. ஏன்?







மதுவிற்கு எதிராகக் காலங்காலமாகவே நாட்டு நலன் மீதும் மக்களின் நலம் மீதும் அக்கறை கொண்டோர் தொடர்ந்து பரப்புரை செய்துவந்துள்ளனர். **புத்தர், வள்ளுவர், கிருத்துவத் துறவியர், திருமூலர் முதல் - சென்ற நூற்றாண்டில் மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், குன்றக்குடி அடிகளார், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார், முன்னாள் முதல்வர் குமாரசாமி இராஜா, சி.சுப்ரமணியம், பேறறிஞர் அண்ணா, தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு.வி.க, ம.பொ.சி, வ.உ.சியும் தோழர் ஜீவாவும்** எனும் ஒரு பெரிய பட்டாளமே மதுவினைத்




தொடர்ந்து எதிர்த்துள்ளனர். அண்மைக் காலங்களில் அரசியல் வேறுபாடின்றி **திருவாளர்கள் குமரி அனந்தன், வைகோ, தமிழருவிமணியன், சேலம் மருத்துவர் ஃபராங்களின் ஆசாத் காந்தி, சசிபெருமாள், பாமக மகளிர் அணி, வழக்கறிஞர் நந்தினி, அய்.ஜே.கே**





**பாரிவேந்தர், டிராஃபிக் ராமசாமி** போன்றோரும் விடாது போராடி வருகின்றனர். இவர்களைத் தவிர பல சமுதாய, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கடந்த 15 ஆண்டுகளாகவே மதுவிற்கு எதிரான பல போரட்டங்களை நடத்தி வருகின்றனர்.


- இவற்றுள் குறிப்பாக......**Alcohol Anonymus Al-Anon,** சட்டப் பஞ்சாயத்து இயக்கம் - 2016 ஆம் ஆண்டை மதுவிற்கு எதிரான ஆண்டாக அறிவித்து பல எதிர் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். **PMALD - People Movement Against Liquor & Drugs** இவர்களுள்




100 இளைஞர்கள் அக்டோபர் 2, 2014 முதல் ஜனவரி 12, 2015 வரை 100 நாட்கள் கன்னியாகுமரியிலிருந்து தலைநகர் சென்னை வரை நடைப்பயணம் மேற்கொண்டு பரப்புரை செய்தனர். சென்னை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் அவ்வப்போது மது விற்பனைக்கெதிராக சில அறிவுறுத்தல்களைத் தெரிவிக்கின்றனர்.




- உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த **திரு.இரா.ரவிக்குமார்** (மதிமுக) என்பவர் **"முழு மதுவிலக்கு - அதுவே நமது இலக்கு"** என்று 366 பக்கங்கொண்ட முழு நூலையே ஏப்ரல் 2015இல் வெளியிட்டுள்ளார். இந்திய அரசியல் சாசனம் பிரிவு 47-மது விலக்கினை வலியுறுத்தும்




போது - தமிழக அரசே மதுக்கடைகளை அமைத்து நடத்துவது - அரசியல் சட்டத்தையே கேலிக் கூத்தாக்குகிறது எனச் சாடுகிறார்.

- பா.ம.க, எஸ்டிபிஐ, அய்ஜேகே கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகம், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்




இயக்கம், AIVP, RSS, சேவாபாரதி, தேமுதிக, இடதுசாரிகள், தமிழக வாழ்வுரிமைக்கட்சி, பாஜக என அனைத்தும் மதுவிலக்குக் கோருகின்றன. மது இல்லாத் தமிழகம் ஒன்றும் கற்பனையில்லை என்கிறார் தமிழ்த் தேசிய பேரிய க்கத்தின் திரு. க. அருணபாரதி.




- ஆனந்தி அம்மாள், செந்தமிழ்ச்செல்வி, இராணிவாய்க்கால், விசிறி சாமியார், குட்டம் சிவாஜி முத்துக்குமார், மதுரை தன்ராஜ் என மதுவிற்கு எதிரானவர் பட்டியல் நீள்கிறது, நம்பிக்கை பெருகுகிறது.
- கேரளா மாநிலம் வரும் 10 ஆண்டுகளில் படிப்படியாக

மதுக்கடைகளை மூடுமென்று அறிவித்து - முன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. **தாலிக்கு இலவசமாகத் தங்கம் தந்து** - இத்தகைய இளம் **பெண்கள் தாலியறுக்கவும் இந்தத் தமிழக அரசே** - காரணமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் தான் மிகுதியாக இளம் வயது விதவைகளிருப்பதாகவும் - அதிகமான சாலை விபத்துக்கள் - மதுவினால் நடைபெறுவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய அச்சுறுத்தல்களால் - தமிழக அரசு அசைவதாய் இல்லை. இலவசங்களுக்காக ரூ.10000 கோடி அளித்திடவும் பிற வருவாய்ப் பற்றாக்குறையினைச் சரிகட்டவும் அதைவிட முக்கியமாக அரசியலாளர்க்கு மதுத் தயாரிப்பாளர் தரும் கணக்கில் வராத கழிவுகட்காகவும் (Commissions) - மதுவிலக்கினை அமுல்படுத்தத் தயாராகவில்லை என்கிறார் சட்டப்பஞ்சாயத்து இயக்கப் பொதுச்செயலாளர் திரு.செந்தில் ஆறுமுகம். (2014-2015 டாஸ்மாக் வருமானம் ரூ.26,188 கோடி, 2015-16 இலக்கு / குறியீடு - ரூ.29672 கோடிகள்).

## 7. நல்ல மக்களின் ஒத்துழைப்போடு...

நம்முடைய பரப்புரையில் வருவாய்க்குக் கூடுதலான வருவாய் வரும் வழிவகைகளைப் பட்டியலிட்டுள்ளோம் இலவசங்களைக் குறைக்காது, இலவசங்களின் பட்டியலை ஆளுவோர் கூட்டிக் கொள்ளவும் போதிய வழிவகைகளைத் தந்துள்ளோம். இத்துடன் ஏறக்குறைய 2.00 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினையும் உறுதி செய்துள்ளோம்.

பன்னாட்டு பணமுதலைகளும் உள்ளூர் அட்டூழியர்களும் அரசின் கொள்கை மாறும் போது புதிய புதிய வழிகளைக் கண்டுபிடித்துக் கொள்வர். ஏனென்றால் Survival is their Life's struggle. மூன்றவதாக அரசியலார்க்கு ஊக்கத்தொகை வசூலிக்க ஆயிரம் வழிகள் உள்ளன. எனவே இவைபற்றி நாம் பெரிதுபடுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

நம்முடைய கவனமெல்லாம் முழு மதுவிலக்கு, தமிழ்ச் சமுதாயத்தை சத்தமில்லாத கொடிய இனப்படுகொலையிலிருந்து காப்பாற்றுவது தான். மக்களின் ஆதரவு உள்ளது. சமுதாய அக்கறை கொண்டோர் நம்முடன் உள்ளனர், பல அரசியல் அமைப்பினரும் ஒத்துழைப்பு தருகின்றனர். எனவே நமக்கு வேண்டியது முன்னோக்கிய பயணம் மட்டுமே. **பாதங்கள் நடக்கத் தயாராய் இருந்தால் பாதைகள் மறுப்புச் சொல்லப் போவதில்லை (கவிஞர்.மு.மேத்தா).** வாருங்கள் நண்பர்களே - **நம்மாலும் முடியும் தமிழகத்திலிருந்து மதுவினை முற்றிலுமாக விரட்டிட. நன்நம்பிக்கையே நல்ல வாழ்க்கை.**




-நிறையும்.



மெல்லத்
தமிழன்
இனி...!


டி.எல். சஞ்சீவிகுமார்


நீர்
நிலம்
வனம்
கடல்


சமஸ்


முழு மதுவிலக்கு
அதுவே நமது இலக்கு


இரா. ரவிக்குமார்


மது
இல்லாத் தமிழகம்
கற்பனையா?


க. அருணபாரதி

இத்துண்டறிக்கைக்கு உறுதுணை...

- **முனைவர்.ச.முத்துக்குமரன்,** முன்னாள் துணைவேந்தர்
- **பொறிஞர்.தெ.கெஜராஜன்,** முன்னாள் தலைமைப் பொறியாளர்
- **பொறிஞர்.ஆர்.ரெங்கராமானுஜம்,** முன்னாள் தலைமைப் பொறியாளர்
- **பொறிஞர்.சா. காந்தி,** தமிழக மின் பொறியாளர் கூட்டமைப்பு
- **மருத்துவர்.மு.வள்ளுவன்**, M.B.B.S., DO, விருத்தாச்சலம்
- **திரு.டி.எல். சஞ்சீவிகுமார்** (மெல்லத் தமிழன் இனி...)
- **திரு.ச.சமஸ்,** (நீர் நிலம் வனம்.. கடல்)
- **திரு.இரா.ரவிக்குமார்.....** (முழு மதுவிலக்கு - அதுவே நமது இலக்கு)
- **திரு.க.அருணபாரதி,** (மது இல்லாத் தமிழகம் - கற்பனையா?)
- **சட்டப் பஞ்சாயத்து இயக்கம், சென்னை** (9962510291 Helpline: 7667100100)
- **திரு.தங்கர் பச்சான்**, திரைப்பட இயக்குநர் (சொல்லத் தோணுது)
- **திரு. சிவகுமார்,** தமிழ்த் திரைப்படக் கலைஞர் - தமிழ்ச் சமுதாய அக்கறையாளர்









மதுவிலக்கை வலியுறுத்தி காந்தீய சசிபெருமாள்
உண்ணா நோன்பு











மதுவிற்கு எதிரான
மக்கள் நடைப்பயணம் (PMALD)


மது விலக்கை வலியுறுத்தி
சான்றோர் அறப்போராட்டம்